©
தமிழ்நாடு அரசு
2009

கையெழுத்துத் தொடர்

# நிதி (படிகள்)த் துறை

## அரசு ஆணை எண்.461, நாள் 22.09.2009.

*(புரட்டாசி 6, திருவள்ளுவர் ஆண்டு 2040)*

வருங்கால வைப்பு நிதி – பொது வருங்கால வைப்பு நிதியின் மாதச் சந்தா வீதம் குறித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

படிக்கவும்:-

1. அரசாணை நிலை எண்.579, நிதி (படிகள்)த் துறை, நாள் 07.10.1998.
2. அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியக் குழு)த் துறை, நாள் 01.06.2009.

*****

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பொது வருங்கால வைப்பு நிதியின் கீழ் திருத்திய மாதச் சந்தா வீதம் குறித்து ஆணை வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணையின் இணைப்பில் மாதச் சந்தா தொகை எவ்வளவு பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவற்றுடன், அலுவலர் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட திருத்திய ஊதிய விகிதம் குறித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மைய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை திங்களிலிருந்து திருத்திய அகவிலைப்படி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது. அதனைப் பின்பற்றி, மாநில அரசு அலுவலர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை திங்களிலிருந்து திருத்திய அகவிலைப்படி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

4. மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொது வருங்கால வைப்பு நிதியின் மாதச் சந்தாவினை தற்போது பெறப்படும் அடிப்படை ஊதியம் (basic pay), தர ஊதியம் (grade pay), சிறப்பு ஊதியம் (special pay), தனி ஊதியம் (personal pay), அகவிலைப்படி (dearness allowance) ஆகியவற்றினைச் சேர்த்து தற்போது உள்ள 12 சதவீதத்திலேயே பொது வருங்கால வைப்பு நிதி மாதச் சந்தாவினை பிடித்தம் செய்யப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

5. பொதுவாக, இனி வருங்காலங்களில் அரசு அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு / அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும் நாளிலிருந்து தற்போது உள்ள 12 சதவீதத்திலேயே பொது வருங்கால வைப்பு நிதி மாதச் சந்தாவினை பிடித்தம் செய்யப்பட வேண்டும். மாதச் சந்தா கணக்கிடுகையில் பின்னமாக வரும் தொகை எவ்வளவாக இருந்தாலும், அடுத்த பத்து ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும்.

6. பொது வருங்கால வைப்பு நிதியில் 12 சதவீதத்திற்கு மேலாக மாதச் சந்தா நிதி செலுத்துபவர்களுக்கு அவ்வாறு செலுத்த தடையேதுமில்லை.

7. மேற்படி ஆணை கீழ்கண்டவர்களுக்கு பொருந்தும்.

(i) பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ் நாடு);
(ii) புதுக்கோட்டை வருங்கால வைப்பு நிதி;
(iii) திருவாங்கூர் வருங்கால வைப்பு நிதி;
(iv) ஆசிரியர் வருங்கால வைப்பு நிதி;

8. மேற்படி ஆணை 01.09.2009 முதல் அமலுக்கு வருகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

**கு. ஞானதேசிகன்**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை—9.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை—32.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை—32.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை—32.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை—18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை—18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை—18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—I), சென்னை—18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—I), சென்னை—18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—II), சென்னை—18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—II), சென்னை—18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை—9 / மதுரை.
இயக்குநர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை—15.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (கிழக்கு), சென்னை—5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை—9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தெற்கு), சென்னை—35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (வடக்கு), சென்னை—79.
சம்பளக் கணக்குகள் அலுவலர், மதுரை 625 001.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூல அலுவலகங்கள்.

தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்ற ஆணையாளர், எண்.6, மாணிக்கேஸ்வரி சாலை, சென்னை–10.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை–104.
அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர், மாநகராட்சி, சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், எண்.570, அண்ணா சாலை, சென்னை–18.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

<u>நகல் பெறுநர்</u>
அரசு தலைமைச் செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மத்திய அரசுச் செயலாளர், உள்துறை அமைச்சகம், புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (வங்கிகள் வருவாய்த்துறை) புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர்,வெளிவிவகாரஅமைச்சகம், புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சிஅலுவலர், சம்பளஆராய்ச்சிப் பிரிவு, நிதி அமைச்சகம் (செலவுத்துறை), அறை எண் 261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி : அனுப்பப்படுகிறது //

ப. நாகராஜன்
22/09/2009

பிரிவு அலுவலர்